

# பிரித்தானியா

## வாழ் சொந்தங்களே..




## "தியாகத்தின் வழியில் பயணிக்கும்

# அன்னை அம்பிகையின்

## அறவழிப் போராட்டத்திற்கு வலுச்சேர்ப்போம் வாருங்கள்!"

**ஆயுதம் மௌனிக்கப்பட்ட பிறகு கடந்த 11 ஆண்டுகளுக்கும் மேலாக அறவழியில் பல போராட்டங்களை மேற்கொண்டிருந்த பொழுதும் தமிழர்களுக்கான நீதி இன்று வரை கிடைக்கவே இல்லை!!**
**கல்நெஞ்சம் படைத்த உலகத்திடம் தொடர்ச்சியாக நீதிகேட்டுப் போராடி தமிழர்களின் கண்ணீரும், செந்நீரும் வீணாகிப் போனது தான் மிச்சம். அந்த வகையில்.. பிரித்தானியாவில் நீதிக்கான பல அறவழிப் போராட்டங்களில் ஈடுபட்டு வந்திருந்த பொழுதிலும் சற்றும் மனம் தளராத அன்னை அம்பிகை அவர்கள், கடைசி ஆயுதமாக.. தியாகதீபம் திலீபன், ஈகைச்சுடர் அன்னை பூபதி இவர்களின் தியாகத்தின் வழியில் தடம் பதித்து தனது நான்கு அம்ச கோரிக்கைகளில் ஒன்றேனும் நிறைவேறாத பட்சத்தில் உயிரை அர்ப்பணிக்கும் வரையிலான போராட்டத்தை உறுதியோடு கையிலெடுத்தார்.**
**இலங்கையில் நடைபெற்ற தமிழினப் படுகொலைக்கு அனைத்துலக நீதிவேண்டி முன்வைத்த கோரிக்கைகள்..**

**01) அனைத்துலக சுயாதீன விசாரணை பொறிமுறை ஒன்றை உருவாக்குதல் (IIIM / IIMM க்கு நிகரான).**

**02) இலங்கை விவகாரம் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் (ICC) விசாரிக்கப்பட வேண்டும் என பரிந்துரை.**

**03) சிறீலங்காவிற்கான தனியான நிரந்தர அறிக்கையாளரை நியமித்தல்.**

**04) தமிழர் தலைவிதியை தீர்மானிக்க வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஐ.நா. ஆதரவுடனான கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பிற்கான பரிந்துரை.**

**ஆகிய நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பெப்ரவரி 27ம் தேதி மதியம் 12 மணிக்கு பிரித்தானிய பாராளுமன்ற சதுக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டமானது 12 நாட்களைக் கடந்து செல்கிறது. தனது உடலையும், உயிரையும் உருக்கியேனும் பிரித்தானிய அரசின் வாயிலாக ஐ.நா.வின் காதுக்கு எமது நியாயமான கோரிக்கைகளை எட்டிவிடச் செய்யலாம் என்பதே இப்போராட்டத்தின் ஒற்றை நோக்கம்.**

**UK! Do not betray Tamil Victims of Genocide in Sri Lanka!**



# "தியாகத்தின் வழியில் பயணிக்கும் அன்னை அம்பிகையின் அறவழிப் போராட்டத்திற்கு வலுச்சேர்ப்போம் வாருங்கள்!"




**பிரித்தானியா வாழ் சொந்தங்களே..**
**இது அன்னை அம்பிகை அவர்களின் தனிப்பட்ட தேவையா? இல்லை, ஒட்டுமொத்த தமிழர்களின் தேவையா?? ஒருகணம் சிந்தியுங்கள்.**

**"ஓடாத மானும் போராடாத இனமும் வாழாது!"**
**எனும் தேசியத் தலைவரின் சிந்தனையை மனதில் நிறுத்தி, எதிர்வரும் 14.03.2021 ஞாயிறன்று (சரியாக மதியம் 12 மணிக்கு) அமைப்புகள், கட்சிகள் என்ற பாகுபாடுகளைப் புறந்தள்ளி தமிழர்களாக ஒன்றுகூடி Kenton Road, Harrow, HA3 9NR எனும் இடத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுப்போம் வாருங்கள்..**

**இது எம் இனத்தின் அடிப்படை உரிமை! உயிரோடு இருந்து சாதிக்க முடியாத ஒன்றை, உயிர் பிரிந்த பின்னர் சாதிப்பது சாத்தியமா?**

**நம் கண் முன்னே.. ஒருயிர்! தன்னை வருத்தி, குடல் சுருக்கி, குரல் தளர்ந்து போகிறதே.. தமிழர்களாய் நாம் இதையும் சகித்துக் கொண்டே போவோமானால், எம்மினம் விடுதலை அடைவதற்கு வாய்ப்பே இல்லை! ஆயிரம் வேலைகள் இருப்பினும் அந்த ஒரு நாள் ஒரு உயிரை மீட்பதற்காக தன்னலம் தவிர்த்து இனமாக ஒன்று கூடுவோம் வாருங்கள்.**

**அழைப்பு,**
**பிரித்தானியா வாழ் தமிழர்கள்.**




**UK! Do not betray Tamil Victims of Genocide in Sri Lanka!**